தாம்பரம்-செங்கல்பட்டு இடையே 4வது ரெயில் பாதை திட்டம்: ரூ.757 கோடியில் செயல்படுத்த ரெயில்வே அமைச்சகம் ஒப்புதல்

சென்னை, அக்.23

தாம்பரம்-செங்கல்பட்டு இடையேயான 4வது ரெயில் பாதை திட்டத்துக்கு மத்திய ரெயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்து உள்ளது. இத்திட்டம் ரூ.757.18 கோடியில் அமைய உள்ளது.

தாம்பரம்-செங்கல்பட்டு ரெயில் பாதையானது தென் மாவட்டங்களுக்கு செல்லும் பிரதான ரெயில் பாதையாக இருக்கிறது. எழும்பூரில் இருந்து செல்லும் பெரும்பாலான தென் மாவட்ட ரெயில்கள் இப்பாதை வழியே செல்கிறது.

நாள்தோறும் இந்த பாதை வழியே 60க்கும் மேற்பட்ட எக்ஸ்பிரஸ் ரெயில்களும், 300க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்களும் இயக்கப்படுகின்றன. மின்சார ரெயில் சேவையை பொறுத்தவரையில் சென்னை கடற்கரை–செங்கல்பட்டு வழித்தடத்தில் மட்டும் ஒரு நாளைக்கு 4 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் சென்று வருகின்றனர். தற்போது இந்த வழித்தடத்தில் 3 பாதைகள் மட்டுமே உள்ளன. கூடுதல் பாதைகள் இல்லாததால் தென் மாவட்டங்களுக்கு இந்த வழித்தடத்தில் கூடுதல் ரெயில்களை இயக்க முடியாத நிலை இருந்து வந்தது.

இதுபோக விழாக்காலங்களில் சிறப்பு ரெயில்கள் விடப்பட்டாலும் குறைந்த அளவில் விடும் நிலையே இருந்து வருகிறது. எனவே, தாம்பரம்-செங்கல்பட்டு 4வது ரெயில் பாதை திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென பயணிகள் மத்தியில் கோரிக்கை எழுந்தது. இதேபோல, 4வது புதிய பாதை அமைக்கும் திட்டத்துக்கு தமிழக அரசும் விருப்பம் தெரிவித்திருந்தது. அதன்படி, இந்த திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய ரெயில்வே அமைச்சகத்திடம் தெற்கு ரெயில்வே வழங்கியது.

இந்த நிலையில், தாம்பரம்–செங்கல்பட்டு இடையிலான 4வது ரெயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தாம்பரம்–செங்கல்பட்டு இடையிலான 30.2 கிலோ மீட்டர் தூரத்திலான 4வது ரெயில் பாதை திட்டத்திற்கு மத்திய ரெயில்வே மந்திரி ஒப்புதல் அளித்துள்ளார். இந்த திட்டத்தின் செலவு ரூ.757.18 கோடி என மதிப்பிடப்பட்டு உள்ளது. சென்னை கடற்கரை முதல் கன்னியாகுமரி வரையிலான வழித்தடத்தில் தாம்பரம்-செங்கல்பட்டு பிரதான பாதை ஆகும். மின்சார ரெயில்களும், எக்ஸ்பிரஸ் ரெயில்களும் இந்த வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. அதிக அளவிலான பயணிகள் இந்த வழித்தடத்தை பயன்படுத்துகிறார்கள்.

அந்த வகையில், தற்போது இந்த வழித்தடத்தில் பயணிகளின் பயன்பாடு 87 சதவீதமாக இருக்கிறது. புதிய பாதை செயல்படுத்தப்படும் போது அது 136 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல, பயணிகளின் கூட்ட நெரிசலும் குறையும். செங்கல்பட்டு வரையில் மின்சார ரெயில் சேவையை நீட்டிக்கவும் இது உதவும். தாம்பரம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு, ஸ்ரீபெரும்பதூர் ஆகிய பகுதிகளில் அதிகரிக்கும் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமையும். மேலும், தென் மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகளுக்கு பெரிதும் பயனளிக்கும். இதேபோல, இந்த வழித்தடத்தில் ஆண்டுக்கு ரூ.157 கோடி அளவில் வருவாய் ஈட்டும் வகையில் சரக்கு ரெயில் போக்குவரத்தும் கையாளப்படும்.

அமெரிக்கா வாழ் தேன்மொழி சவுந்தரராஜனுக்கு ‘வைக்கம் விருது’: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, அக்.23

2025ம் ஆண்டுக்கான ‘வைக்கம் விருது'க்கு மதுரையை பூர்வீகமாக கொண்ட அமெரிக்காவில் வசித்து வரும் தேன்மொழி சவுந்தரராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளதாக தமிழக அரசு அறிவித்து உள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

எல்லை கடந்து சென்று சமூக நீதிக்காக வைக்கத்தில் போராடிய தந்தை பெரியாரை நினைவுகூறும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப் பட்டவர்கள் நலனுக்காக பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ‘வைக்கம் விருது’ வழங்கப்படுகிறது. இந்த விருது, சமூகநீதி நாளான செப்டம்பர் 17ந் தேதி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2025ம் ஆண்டுக்கான வைக்கம் விருதுக்கு, அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் வசித்து வரும் தேன்மொழி சவுந்தரராஜன் தேர்வு செய்யப்பட்டு உள்ளார். மதுரை மாவட்டத்தை பூர்வீகமாக கொண்ட இவர், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.

சாதியத்தால் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக தீவிரமாக பிரசாரம் செய்து வருகிறார். அமெரிக்காவிலும், உலக அளவிலும் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் சிவில் உரிமைகள் அமைப்பான ஈக்வாலிட்டி லேப்ஸின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனராக இருந்து வருகிறார். அமெரிக்காவிலும், இந்தியாவிலும் சாதி பாகுபாட்டுக்கு எதிராக பணியாற்றி வருகிறார். சாதியின் பெயரால் பாகுபாடு காட்டப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இவர் எழுதிய புத்தகத்துக்கு ஆசியன், பசிபிக் அமெரிக்கன் இலக்கிய விருது கிடைத்துள்ளது. தெற்காசிய ஆய்வு துறையில் சிறந்து விளங்கியமைக்காக தெற்காசிய இலக்கிய சங்கத்தின் விருதையும் பெற்றுள்ளார். தேன்மொழி சவுந்தரராஜனுக்கு ரூ.5 லட்சத்துக்கான காசோலை, பாராட்டு சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் முதலமைச்சரால் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மழைக்கால மின் விபத்துகளை தவிர்ப்பது எப்படி? தலைமை மின் ஆய்வாளர் விளக்கம்

சென்னை, அக்.23

மழைக்கால மின் விபத்துகளை தவிர்ப்பது குறித்து தமிழக அரசின் தலைமை மின் ஆய்வாளர் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக அரசின் தலைமை மின் ஆய்வாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மழைக்காலங்களில் மின் மாற்றிகள், மின் கம்பங்கள், மின் பகிர்வு பெட்டிகள் ஆகியவற்றின் அருகே செல்லக்கூடாது.

மழையாலும், பெரும் காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின்சார கம்பி அருகே செல்லக்கூடாது. இதுதொடர்பாக அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

மின்கம்பங்களை பந்தல்களுக்கு பயன்படுத்தக்கூடாது. அதன்மீது விளம்பர பலகைகளை கட்டக்கூடாது. மின் கம்பத்திலோ, அவற்றை தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளை கட்டுவது கூடாது.

மின் மாற்றிகள் மற்றும் துணை மின் நிலையத்துக்காக போடப்பட்டுள்ள வேலியின் அருகில் சிறுநீர் கழிக்கக்கூடாது.

மின்சாரத்தால் ஏற்பட்ட தீயை தண்ணீர் கொண்டு கட்டுப்படுத்த வேண்டாம். தீ விபத்து மின்சாரத்தால் ஏற்பட்டது எனில் உடனடியாக மெயின் சுவிட்சை நிறுத்தி விட வேண்டும். இடிமின்னலின்போது டி.வி., மிக்சி, கிரைண்டர், கணினி மற்றும் செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

கான்கிரீட் கூரையிலான பெரிய கட்டிடம், வீடு போன்ற பெரிய கட்டிடம் மற்றும் மேற்கூரை உலோகத்தால் மூடப்பட்ட பஸ், கார், வேன் போன்ற வாகனங்களில் தஞ்சம் அடையுங்கள்.

குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பஸ் நிறுத்த நிழற்குடையின் கீழ் பகுதியிலோ தஞ்சம் புகுதல் கூடாது.

மின்சார பெட்டியை சுற்றி தண்ணீர் தேங்கி நிற்கும்போது அதன் அருகில் செல்ல வேண்டாம். அதிக மின்பளு கொண்ட கருவிகளை இயக்கும்போது ரப்பர் பூட்ஸ் காலணிகளை அணிந்து கொள்ளுங்கள்.

பால்கனி பகுதி, மொட்டை மாடியில் திறந்த வெளியில் உள்ள மின்சாதனங்கள், பிளக் பாயிண்டுகள் மழைநீர் புகாத வகையில் மூடப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின் பலகைகளை ஒருபோதும் தொடக்கூடாது. மின்கம்பத்தை தாங்கும் கம்பிகள் அல்லது மின்கம்பத்தின் மீது கயிறு கட்டி துணிகளை காய வைப்பதை தவிர்க்க வேண்டும்.

மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில் சுவிட்சை ‘ஆப்’ செய்து வைக்க வேண்டும். மின்சார தீ விபத்துகளுக்கான தீயணைப்பான்களை மட்டுமே மின்சாதனங்களில் தீ விபத்து ஏற்படும் போது பயன்படுத்த வேண்டும்.

உலர்ந்த மணல், கம்பளி போர்வை, உலர்ந்த ரசாயன பொடி, கரியமில வாயு ஆகிய தீயணைப்பான்களை பயன்படுத்தலாம். சார்ஜர் ஏற்றும் போது செல்போனை பயன்படுத்தக்கூடாது.

சுவிட்ச் போர்டு, மின் மோட்டார், தண்ணீர் பம்பு போன்றவற்றின் மீது தண்ணீர், மழைநீர் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Chola
Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரரர்கள் மற்றும் உத்தரவாதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சார்ஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடைமையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்:
கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in

வ எ ண்	(ஏ) கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	(பி) மீட்க வேண்டிய பாக்கி (ஓ/எஸ்) (ஈடுபெற்ற ஆஸ்திகள்)	(சி) அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	(டி) சுவாதீன வகை	(இ & எப்) குறைந்தபட்ச விலை (ரூபாயில்) முன்வைப்புத் தொகை (ரூ.)	(ஜி) ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்): **HL10CUD000043998** 1. திரு/திருமதி. சுப்புராயன் 2. திரு/திருமதி. மாலதி சுப்புராயன் முகவரி: எண். 2/54, பாண்டி மெயின் ரோடு, வானூர் தாலுக்கா, திருச்சிற்றம்பலம், விழுப்புரம், பேருந்து நிறுத்தம், பாண்டிச்சேரி, தமிழ்நாடு 605111. மேலும் இங்கு: எஸ்.ஆர். எண். 88/3/C/1, ஓ.எஸ்.ஆர். 88/3 வில்லியனூர் பேருந்து நிறுத்தம், பாண்டிச்சேரி 605111.	17.04.2025 **அன்று ரூ. 20,17,265/– (ரூபாய் இருபது லட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து மட்டும்)**	புதுச்சேரி பதிவு மாவட்டம், வில்லியனூர் சார் பதிவு மாவட்டம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து, கரசூர் வருவாய் கிராமம் விற்பனைக்கு தற்போது மறு சர்வே எண். 88/3/சி/1–ல் உள்ள விஸ்தீரணம் ஆர்01, குழி 01, வீசம் 14. எல்லைகள் : கிழக்கே துளசிக்கு சொந்தமான நிலம், மேற்கே சாலை, தெற்கே துளசி வீடு, வடக்கே கலியமூர்த்தி நிலம், பத்திர மறு சர்வே எண். 88/3, கேடஸ்டர் எண். 269, பட்டா எண். 108–ல் உள்ள 1079 சதுர அடி நிலம் & கட்டிடம் 1890 சதுர அடி புதுச்சேரி பதிவு மாவட்டம், வில்லியனூர் சார் பதிவு மாவட்டம், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தில் இந்த சொத்து உள்ளது.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	**ரூ. 36,21,330/– (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து இருபத்தி ஒரு ஆயிரத்து முந்நூற்று முப்பது மட்டும்) ரூ. 3,61,133/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்து ஒரு ஆயிரத்து நூற்று முப்பத்து மூன்று மட்டும்)**	**12.11.2025** அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)
2	கடன் கணக்கு எண்(கள்): HL05THU000052841 1. திரு. / திருமதி. எம். சௌஜன்யா 2. முனிரத்தினம் சிவா வசிப்பிடம் : எண்.1, பிரித்திவி நகர், கும்மிடிப்பூண்டி, தமிழ்நாடு 601 201; மேலும் முகவரி : எஸ். எண். 277B/28 (புதியது) & 277B/2E1A1C2A பகுதி (பழையது) / மனை எண். 57 / மனை எண். 57 சாய்பாபா நகர் விரிவாக்கம், பெத்திக்குப்பம் கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, மகாராஜா மெட்ரிக் பள்ளி அருகில், கும்மிடிப்பூண்டி 601 201.	17.02.2025 **அன்று ரூ. 29,96,631/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து அறுநூற்று முப்பத்தொன்று மட்டும்)**	1800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம், மனை எண். 57, பட்டா எண். 8330ன்படி பழைய சர்வே 277B/2E1A1C2A பகுதி துணைப்பிரிவு புதிய சர்வே 277B/28ல் உள்ளது. ஈடுபெற்ற சொத்து 1800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தை உள்ளடக்கி உள்ளது. இது திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர், பெத்திகுப்பம் கிராமத்தில் எண்.62ல் அமைந்துள்ளது. அதன் எல்லைகள் : • வடக்கு : 16 அடி அகல சாலை; • தெற்கு : மனை எண். 63; • கிழக்கு : மனை எண். 56; • மேற்கு : மனை எண். 58. அதன் விஸ்தீரணம் • கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 30 அடி; • கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில் 30 அடி; • வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில் 60 அடி; • வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில் 60 அடி; மொத்தம் 1800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம்.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	**ரூ. 48,06,720/– (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து ஆறாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) ரூ.4,80,672/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு மட்டும்)**	**12.11.2025** அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)
3	கடன் கணக்கு எண்(கள்): HL23TNM000074198 **1. திரு/திருமதி. ராதிகா சி. 2. திரு/திருமதி. மேகநாதன்** முகவரி. : 103/47, V. M. தெரு, ராயப்பேட்டை, கில் ஆதர்ஷ் பள்ளி அருகில், சென்னை, தமிழ்நாடு 600 014; மேலும்: 23/27, பிளாட் எண். 4, முதல் தளம் முஸ்த்ரா பேகம் தெரு, மயிலாப்பூர் கிராமம், திருவல்லிக்கேணி, சென்னை தமிழ்நாடு 600 014.	11.03.2025 **அன்று ரூ.27,93,739/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்பது மட்டும்)**	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் நிலம் மற்றும் கட்டிடம். பிளாட் எண். F–4, முதல் தளம், 525 சதுர அடி. புதிய எண். 27, பழைய எண். 23, முஸ்துரா பேகம் தெரு, ராயப்பேட்டை சென்னை, பிரிவுபடாத பங்கு நிலம் 170 சதுர அடி. ஓ.எஸ்.எண். 3988, ஆர்.எஸ். எண்.722 (பகுதி), பிளாக் எண்.12, மயிலாப்பூர்– திருவல்லிக்கேணி தாலுகாவில் இந்த சொத்து உள்ளது. + எல்லையில் • வடக்கு : வி.எம். தெரு, 2வது சந்து: தெற்கு : முஸ்துரா பேகம் தெரு, கிழக்கு : சின்னான் அவர்கள் சொத்து, மேற்கு : சையது காதர் பாஷா அவர்கள் சொத்து.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	**ரூ. 36,85,500/– (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்) ரூ. 3,68,550–/ (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பது மட்டும்)**	**12.11.2025** அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)

★ ஆய்வு தேதி & நேரம் : 10.11.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. **★ குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/–**

★ஏலம் / இஎம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 11.11.2025 அன்று மாலை 5.00 மணிவரை

★ பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன. சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், **திரு. முரளி, மொபைல் எண்.** 8939998886, **மின்னஞ்சல் முகவரி** :muralimr@chola.murugappa.com,/**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அதிகாரி, திருமதி. கோமல் சர்மா அவர்களை,** 8870464652 **என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.** சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

தேதி : 22.10.2025
இடம்: புதுச்சேரி/திருவள்ளூர்/ சென்னை, தமிழ்நாடு

IN THE COURT OF THE HONBLE IVth ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE TIRUVALLUR AT PONNERI
E.A. No. 3 of 2025
In
E.P. No. 191 of 2019
In
Arb. Award Case No.252 of 2010

M/s. APNA FINANCE (INDIA) LTD.,
No. 1, Mangappan St, Sowcarpet,
Chennai 600 079.
...Petitioner/Decree Holder
-Vs-
1. Mr. Senthil Kumaran, S/o. Sivagnanam,
No.12/24, Madurai Samy Madam,
2nd Street, Perambur, Chennai –11.
2.Mrs. S. Meenalakshmi,
No.12/24, Madurai Samy Madam,
2nd Street, Perambur, Chennai –11.
3.Mr. Sivagnanm,
No.12/24, Madurai Samy Madam,
2nd Street, Perambur, Chennai –11.
...Respondents /.Judgment Debtors
To,
1.Mr. Senthil Kumaran
2.Mrs. S. Meenalakshmi
3.Mr. Sivagnanm,
All residing at
No.12/24, Madurai Samy Madam,
2nd Street, Perambur, Chennai –11.

My client, M/s. Apna Finance (India) Limited, has filed the above-mentioned EP against you. The said matter came up for hearing on 10.10.2025 and the Hon'ble Judge has ordered Sale Notice through paper publication to you in the said E.A. No. 3 of 2025 in E.P. No. 191 of 2019 returnable by 05.12.2025. Please take notice and make your presence either by person or through counsel on 05.12.2025 at 10:15 AM, failing which you will be set ex-parte and the matter will be decided in your absence.

E. Masilamani
Counsel for Decree Holder

IN THE COURT OF THE HON'BLE PRINCIPAL SUBORDINATE JUDGE, TINDIVANAM
E.A. No. 3 of 2025
In
E.P. No. 141 /2016
In
ARB Case No: 216 L of 2008

M/s. Apna Finance (India) Ltd.,
No. 1, Mangappan St, Sowcarpet,
Chennai 600 079.
...Petitioner/Decree Holder
-Vs-
1) Late Mr. V. Udhaya Kumar,
S/o. Late Vardhaman Nainar,
Estate of Late Mr. V. Udhaya Kumar
Rep By Mrs. Padmavathy
W/o Late V. Udhaya Kumar,
Mrs. Susheela
D/o Late V. Udhaya Kumar &
Ms. Divya, D/o Late V. Udhaya Kumar
No.25/1, IInd Street, Jayapuram,
Tindivanam - 604 002.
2)Mrs. Padmavathy, w/o. Udhayakumar,
No.25/1, IInd Street,
Jayapuram, Tindivanam - 604 002
Cell No : 9976637123
3) Mrs. Susheela, D/o Late V. Udhaya Kumar
No.25/1, IInd Street, Jayapuram,
Tindivanam - 604 002.
4) Mrs. Susheela, D/o Late V. Udhaya Kumar
No.25/1, IInd Street, Jayapuram,
Tindivanam - 604 002.
...Respondent/Principal Judgment debtor / Hirer
To,
2) Mrs. Padmavathy, w/o. Udhayakumar,
3) Mrs. Susheela, D/o Late V. Udhaya Kumar
4)Mrs. Susheela, D/o Late V. Udhaya Kumar
All residing at
No.25/1, IInd Street, Jayapuram,
Tindivanam - 604 002. Sir,

My client, M/s. Apna Finance (India) Limited, has filed the above-mentioned EP No 141 of 2016 against the above mentioned respondents. The said matter came up for hearing on 13.10.2025 and the Hon'ble Judge has ordered Notice through paper publication to you in the said E.P. No. 141 of 2016 returnable by 10.11.2025. Please take notice and make your presence either by person or through counsel on 10.11.2025 at 10:15 AM, failing which you will be set ex-parte and the matter will be decided in your absence.

Jayakumar, Advocate
Counsel For Decree Holder

JAIN METAL GROUP | recycle today. greener tomorrow.

JAIN RESOURCE RECYCLING LIMITED

(Formerly known as Jain Resource Recycling Private Limited)

Registered Office: THE LATTICE, Old No. 7/1, New No. 20, 4th Floor, Waddles Road, Kilpauk, Chennai 600 010 | **CIN**: U27320TN2022PLC150206

Statement of Unaudited Standalone and Consolidated Financial Results of Jain Resource Recycling Limited for the Quarter and Six Months ended September 30, 2025

(₹ Million)

Sl. No.	Particulars	Standalone						Consolidated				
		Quarter ended (Un-Audited) (Rs. In Million)			Half Year ended (Un-Audited) (Rs. In Million)		Year ended (Audited) (Rs. In Million)	Quarter ended (Un-Audited) (Rs. In Million)			Half Year ended (Un-Audited) (Rs. In Million)		Year ended (Audited) (Rs. In Million)
		September 30, 2025	June, 30, 2025	September 30, 2024	September 30, 2025	September 30, 2024	March 31, 2025	September 30, 2025	June 30, 2025	September 30, 2024	September 30, 2025	September 30, 2024	March 31, 2025
1	Total Income from operations	20,549.07	14,696.91	13,434.04	35,245.98	27,798.65	61,432.51	21,137.06	15,492.50	13,921.10	36,629.56	28,885.96	64,293.80
2	Net Profit / (Loss) for the Period (Before Tax and Exceptional items)	1,339.54	793.82	736.53	2,133.36	1,524.06	2,889.23	1,353.43	780.07	752.74	2,133.50	1,561.92	3,033.47
3	Net Profit / (Loss) for the Period Before Tax (After Exceptional Items)	1,339.54	793.82	736.53	2,133.36	1,524.06	2,889.23	1,353.43	780.07	752.74	2,133.50	1,561.92	3,033.47
4	Net Profit / (Loss) for the Period After Tax (After Exceptional Items)	986.38	591.51	546.40	1,577.89	1,130.63	2,111.35	992.07	575.06	558.18	1,567.13	1,158.31	2,218.00
5	Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the Period (After Tax) and Other Comprehensive Income (After Tax)	989.48	589.77	545.37	1,579.25	1,128.50	2,104.41	987.16	566.39	524.54	1,553.55	1,119.31	2,225.02
6	Equity Share Capital	690.17	647.07	410.26	690.17	410.26	647.07	690.17	647.07	410.26	690.17	410.26	647.07
7	Earnings Per Share for Continuing and discontinued operations (Not Annualised)												
	a) Basic	3.05	1.83	1.74	4.88	3.61	6.77	3.06	1.77	1.73	5.00	3.65	7.16
	b) Diluted	3.05	1.83	1.74	4.88	3.25	6.77	3.06	1.77	1.69	5.00	3.29	7.16

Notes:

1) The above unaudited standalone and Consolidated financial results were reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on October 21, 2025 and has been subjected to review by the Statutory Auditors of the Company. These unaudited standalone financial results have been prepared in accordance with the recognition and measurement principles provided in Indian Accounting Standard (Ind AS) 34 on 'Interim Financial Reporting', the provisions of the Companies Act, 2013 (the Act), as applicable and guidelines issued by the Securities and Exchange Board of India (SEBI) under SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015 as amended.
2) The unaudited standalone and Consolidated financial results for the corresponding quarter ended September 30, 2024 have neither been reviewed nor audited by the statutory auditors of the company. However, the management has exercised necessary care and diligence to ensure the consolidated financial results for such period is fairly stated.
3) The figures for the half year ended September 30, 2024 have been extracted from the special purpose standalone and Consolidated financial statements of the Company.
4) Subsequent to the quarter ended September 30, 2025, the Company successfully completed its Initial Public Offering (IPO) of 53,879,309 equity shares with a face value of Rs. 2 each at an issue price of Rs. 232 per share. The IPO comprised a fresh issue of 21,551,724 shares and an offer for sale of 32,327,585 shares by selling shareholders. Following the IPO, the equity shares of the Company were listed on the National Stock Exchange of India Limited (NSE) and the BSE Limited on October 01, 2025.
5) The unaudited standalone and consolidated financial results of the group includes the financial results of the subsidiary Companies and share of profit from associate for the quarter ended June 30,2025, September 30, 2024, half year ended September 30, 2024 and Year ended March 31, 2025.
6) a) The figures for the year ended March 31, 2025 , have been extracted from the general purpose standalone financial statements of the Company for the year ended March 31, 2025 , which were audited by the Statutory auditors of the Company.
   b) The figures for the half year ended September 30, 2024 have been extracted from the special purpose standalone and consolidated financial statements of the Company audited by the statutory auditors of the Company.
7) The Company entered into a definitive agreement to sell its 28.88% equity interest and realize its loan from Sun Minerals Mannar Private Limited.
8) Subsequent to the quarter ended June 30, 2025, the board of directors in their meeting dated October 08, 2025 have approved to incorporate a subsidiary under the provisions of the Companies Act, 2013 with the name and style of "Jain CY Circular Solutions Private Limited" or "Jain CY Recycling Private Limited".
9) Segment information has been provided under the notes forming part of the consolidated unaudited financial results for the quarter and half year ended September 30, 2025 as per para 4 of Indian Accounting Standard (Ind AS) 108 "Operating Segments", specified under Section 133 of the Companies Act, 2013.
10) a) During the period ended 30 September 2025 Jain Ikon Global Ventures has discontinued its operations on refining of precious metals.
    b) The Company entered into a definitive agreement to sell its 28.88% equity interest and realize its loan from Sun Minerals Mannar Private Limited.
11) Figures of previous periods/ year have been regrouped, wherever necessary.
12) The above unaudited standalone financial results are available on the Company's website viz. www.jainmetalgroup.com and on the websites of BSE (www.bseindia.com) and NSE (www.nseindia.com).
13) **The Consolidated Financial results of the Company comprising of Company and its subsidiaries (together the "Group") includes the results of the following entities:**

Company	Relationship	Country of Incorporation	% Holding as at September 30, 2025	% Holding as at June 30, 2025	% Holding as at March 31, 2025
a) Jain Resource Recycling Limited (Formerly known as Jain Resource Recycling Private Limited)	Parent	India	-	-	-
b) Subsidiaries in the Group:					
(i) Jain Green Technologies Private Limited	Subsidiary	India	99.99%	99.99%	99.99%
(ii) Jain Ikon Global Ventures (Classified as held for sale)	Subsidiary	UAE	70.00%	70.00%	70.00%
(iii) Jain Investment Private Limited	Subsidiary	Sri Lanka	100.00%	100.00%	100.00%
c) Associates in the Group:					
(i) Sun Minerals Mannar Private Limited	Associate	Sri Lanka	28.88%	28.88%	28.88%

For Jain Resource Recycling Limited
Sd/-
Kamlesh Jain
Chairman & Managing Director
DIN : 01447952

Place : Chennai
Date : October 21, 2025

Adfactors 332/25